# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.II. Srivilliputtur

C.C.No.60/2018

Deposition of witness for PW.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | ராமானுஜம் | சாதி | .. | |
| த.பெ. | .. | | சமயம் | .. | |
| கிராமம் | .. | | தொழில் | .. | |
| தாலுகா | .. | | வயது | .. | |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 28.6.2022

மு.வி – நான் தற்போது திருவில்லிபுத்தூர்மடவார்விளாகத்தில குடியிருக்கிறேன், திருவில்லிபுத்தூர் தமிழ்நாடு மின்வாரிய கிளையில் வருவாய் மேற்பார்வையாளரா பணிபுரிநது வருகிறேன். வழக்கில இறந்த சிவகுமார் எனது மைத்துனர ஆவார்,. கடந்த 9,7,2016ம் தேதி முறம்புஅருகே உள்ள பெரியாண்டவர் கோவிலுக்கு சாமி கும்பிடுவதற்காக நானும் எனது நண்பர் ம ணிகண்டனும் எனக்க சொந்தமான இரு சக்கர வாகனத்திலும் சிவகுமார் அவருக்கு சொந்தமான டிஎன் 84 6122 என்ற எண் கொண்ட இரு சக்கர வாகனத்தில் சென்ற சாமி கும்பிட்டு விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தபோது மடவார்விளாகம் கிருஷ்ணா நகர் பஸ் ஸ்டாப் அருகே சிவகுமார் முன்னால சென்று கொண்டிருந்தார். நாங்கள் ராஜபாளையத்திலிருந்து தெற்கேயிருந்து வடக்க நோக்கி வந்து கொண்டிருந்தோம். நாங்கள் அவருக்க பின்னால் சென்று கொண்டிருந்தோம் அப்போது எதிரே வந்த டிஎன் 46 எம் 3180 என்ற எண் கொண்ட லாரி வடக்கேயிருந்து தெற்கு நோக்கி அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும இடது புறமாக வரவேண்டிய லாரி வலது புறமாக ஏறி வந்து எனக்க முன்னால சென்ற சிவகுமார் வாகனத்தின் மீது மோதியது.

நாஙகள் வந்து பார்த்தபோது இடது புற விலா எலும்பு இடுப்பு வரை சிதைந்து அதே இடத்தில இறந்து விட்டார். நானும் என்னுடன் வந்த மணிகண்டனும் அதே வழியாக வந்த நண்பர் மதிவாணன் என்பவருடன் தனியார ஆம்புலன்ஸ் மூலம் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். மருத்துவர் சிவகுமாரின் உடலைபரிசோதித்து பார்த்ததில அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக கூறினார். மேற்படி விபத்திற்கு காரணமான லாரியை ஓட்டி வந்தஓட்டுநர் பெரம்பலூர் மாவட்டம் பெரிய வடகரையை சேர்ந்த இதயதுல்லா என தெரிந்து கொண்டேன், (சாட்சி முதலில் தெரியவில்லைஎன கூறிவிட்டு பின்னர் ஆஜர் எதிரியை அடையாளம் காட்டினார்) இது சம்மந்தமாக மாலை 4 மணிக்கு காவல் நிலையம் சென்று எதிரி மீ நடவடிக்கை எடுக்க்கோரி ஒரு புகார் மனு கொடுத்தேன் புகார் மனுவில உள்ள கையெழுதது என்னுடையதுதான் புகார் மனு அசாஆ,.1 ஆகும் இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி – நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் மின்சார வாரியத்தில 35 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறேன். புகார் மனு என்னால் எழுதப்பட்டது என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கும் எனது வீட்டிற்கும் இடையே 1/2 கிமீ தூரமிருக்கும். சம்பவ இடத்திலும் மற்றும் சம்பவயிடத்தை தாண்டி சுமார் 100 மீட்டரிலும் வளைவு உள்ளதென்றால் சரிதான். சம்பவயிடம் அதிகமாக விபத்து நடைபெறும் பகுதி என்றால் அது பற்றிஎனக்கு தெரியாது. சம்ப வ இடத்திற்கு மேல்புறம் கண்மாய்கரை உள்ளதென்றால் சரிதான். மேற்படி கண்மாய்கரை தரை பகுதியிலிருந்து 15 அடி உயரம் இருக்குமென்றால் அது பற்றிஎனக்கு சரியாக தெரியாது. சம்பவயிடத்தில் வளைவுமற்றும் ஏரிகரை இருப்பதால் விபத்து ஏற்படுத்திய

வாகனம் தெரியாது என்றால் சம்பவயிடத்தில் நேராக இருந்ததால் எனக்கு அந்த வழியிலுள்ள தெளிவாக தெரிந்தது. எனது வீடு சம்பவயிடத்திற்கு வடக்கு பகுதியில் உள்ளது. சம்பவம் ஏற்படுத்திய இடத்திலிருந்து விபத்து ஏற்படுத்திய லாரி சம்பவம் நடந்த இடத்தின அருகேதான் நின்று கொண்டிருந்தது என்றால் சரிதான். எதிரி கனரக வாகனத்தை ஓட்டி வந்ததாலும் சம்பவ பகுதி வளைவு பகுதி என்பதாலும் மிதமான வேகத்தில்தான் வந்தார் என்றால் சரியல்ல. எதிரி சம்பவத்தன்று மிதமான வேகத்தில வந்ததால்தான் சம்பவயிடத்தில் வாகனம் நின்று விட்டது என்றால் சரியல்ல. வேகமாக வந்திருந்தால் வாகனம் சம்பவயிடத்திலிருந்து 5 அல்லது 10 மீட்டர் தூரம் நின்றிருக்கும்என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த சாலை 2 வாகனங்கள் செல்லக்கூடிய சாலை என்றால் சரிதான். வழக்கில இறந்துபோனவர் முன்னால சென்ற வாகனத்தை முந்துவதற்காக வாகனத்தை ஓவர்டேக் பண்ணி சென்றதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்து எதிரியின் அஜாக்கிரதையால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை தகவல் தெரிந்து தான் சம்பவயிடத்திற்கு வந்தேன் என்றால் சரியல்ல. நான் ஆஜர்எதிரியை முதன்முதலில் எந்த இடத்தில வைத்து பார்த்தேன் என்றால் நான் சம்பவயிடத்தில் வைத்து பார்த்தேன். ஆஜர் எதிரியை சம்பவத்தின்போதே காவல நிலையத்திற்கு அழைத்து சென்றார்களா என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. நாங்கள்இறந்து போன நபரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். நான் புகார் கொடுக்க சென்றபோது எதிரி காவல் நிலையத்தில் இருந்தாரா என்றால் நான் பார்க்கவில்லை. நான் ஆஜர் எதிரியை சம்பவயிடத்தில் பார்க்கவில்லை என்பதற்காக நான் காவல் நிலையத்தில் விபத்து பற்றி விசாரித்தேனா என்றால் இல்லை.

பதட்டத்தின் காரணமாக நான்எதிரியை பற்றி காவல் நிலையத்தில் விசாரிக்கவில்லை. ஆஜர் எதிரி பற்றிய விவரங்கள் நான் பின்பு விசாரித்து தெரிந்துகொண்டேன். நான் யாரிடம் விசாரித்து ஆஜர் எதிரியை பற்றிதெரிந்து கொண்டேன் என்றால் எனக்கு தெரியாது. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.